இரண்டாவது கூடுதல் உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.

நாள். 09.04.2025

O.S. 46/2020

வா.சா.1, பையன் கிருஷ்ணராஜ்

1,2,4 ம் பிரதி வாதி தரப்பில் குறுக்கு விசாரணை.

வழக்கு பட்டியலில் சொல்லப்பட்டுள்ள ரீசர்வே நம்பர் 273 க்கு மொத்த விஸ்தீரணம் 1 கெக்டர் 98.50 ஏர் என்றால் சரிதான். வழக்கு ஏ பட்டியலில் ரீசர்வே நம்பர் 273/17 ல் 58.50 ஏர் என்று குறிப்பிட்டுள்ளீர் என்றால் சரிதான். வழக்கு பி பட்டியலில் ரீசர்வே நம்பர் 273/18 ல் 47 ஏர் என்று குறிப்பிட்டுள்ளீர் என்றால் சரிதான். எனது வழக்குரையில் வழக்கு பட்டிகை சொத்தில் எல்கை குறித்த விவரங்கள் இல்லையென்றால் எனக்கு ஞாபகமில்லை. வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள அனைத்தும் வழக்கறிஞருக்கு நான் சொல்லியதா மற்ற வாதிகள் சொல்லியதா என்றால் நானும் மற்ற வாதிகளும் சேர்ந்து சொல்லப்பட்டது. இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள் ஆவணங்கள் அனைத்தும் படித்து பாத்தேனா என்றால் படித்து பார்த்தேன். வா.சா.ஆ 1 ஆவணத்தில் ரீசர்வே நம்பர் 273/17 பாதையாக காட்டப்பட்டுள்ளது என்று சொன்னால் தேர் செல்லக்கூடிய ரதவீதி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ரீசர்வே நம்பர் 273/17 காட்டப்பட்டுள்ள தேர் சொல்லக்கூடிய பாதையானது சாமிதோப்பு பதியில் விழா நேரத்தில் தேரானது அந்த பாதை வழியாக கோயிலே சுற்றி உலா வரும் என்றால் சரிதான். கோயில் வாகனம் தினமும் காலையிலும் மாலையிலும் அந்த பாதை வழியாக கோயிலே சுற்றி உலா வரும் என்றால் சரிதான். ரீசர்வே நம்பர் 273/17 ஆக்கிரமிக்க செய்ய யாருக்கும் உரிமையில்லை அவ்வாறு ஆக்கிரமிப்பு செய்திருந்தால் அதை அகற்றுவதில் எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான் ஂ. ரீசர்வே நம்பர் 273/2 ல் சாமிதோப்பில் கோயில் அமைந்துள்ளது என்ாறல் சரிதான். ரீசர்வே நம்பர் 273/2 ல் சாமிதோப்பில் கோயில்ரீசர்வே நம்பர் 273/18 க்கு தெற்கு பக்கம்

அமைந்துள்ளது என்றால் சரிதான். அந்த கோயிலுக்கு சுமார் தினந்தோறும் சுமார் 10 க்கும் மேற்பட்ட ஆட்கள் வருவார்கள் விழா நேரத்தில் 1000 க்கும் மேற்பட்ட ஆட்கள் வருவார்கள் என்றால் சரிதான். அனைத்து மக்களும் ரீசர்வே நம்பர் 273/17 பாதை வழியாகத்தான் வருவார்கள் என்றால் சரிதான். O.S.378/2005 என்ற வழக்கு ரீசர்வே நம்பர் 273/17 பாதையின் அகற்றுவதற்காகத்தான் தாக்கல் செய்துள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ 4 O.S.906/1953 என்பது பாகப்பிரிவினைக்கான வழக்கு அதில் சமரசமாக தீர்ப்பளிக்கப்பட்டது. அதன் தீர்ப்பாணையில் ஒரு வரைபடம் இணைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். O.S.906/1953 என்ற வழக்கில் இந்த வழக்கில் 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பினர்கள் இல்லை என்று சொன்னால் சரிதான். O.S.906/1953 என்ற வழக்கில் வழக்கிலுள்ள தீர்ப்பாணை இந்த வழக்கில் 1 முதல் 4 பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரிதான். O.S.906/1953 என்ற வழக்கில் வா.சா. ஆ 4 ல் குறிப்பிட்டுள்ள வரைபடம் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். O.S.906/1953 என்ற வழக்கில் எந்த ஆவணத்தின் அடிப்படையில் தீர்ப்பளிக்கப்பட்டது என்று வா.சா.ஆ 4 மற்றும்5 ல் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். எந்த ஆவணத்தின் அடிப்படையில் சமரசம் செய்யப்பட்டது என்ற விவரம் தெரியாது என்றால் சரிதான். வா.சா. ஆ 4,5 ஆவணங்களில் சர்வே நம்பர் குறித்த விவரங்கள் எதுவும் இல்லை என்றால் பழைய சர்வே எண் 3207ABC குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா. ஆ 4,5 ஆவணங்களில் வரைபடம் எதுவும் இணைக்கப்படவில்லை என்றால் சரிதான். வா.சா. ஆ 4,5 ஆவணங்களில்எல்கை குறித்த விவரங்களும் இல்லை என்றால் சரியல்ல. பழைய சர்வே எண் 3207ABC கான ரீசர்வே எண். எதுவென காண்ப்பிப்பதற்க்கு புல ஒப்புகை சான்று இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பழைய சர்வே எண்3207ABC க்கு இந்த ரீசர்வே எண் வருமென்று எனக்கு தெரியுமா என்றால் 273, ரீசர்வே எண். 273 ல் எல்லா உட்பிரிவும் வரும் என்றால்

சரிதான். ரீசர்வே நம்பர் 273 தான் என்பதற்க்கு காட்டுவதற்க்கு ஆவணங்கள் தாக்கல் ்செய்யலாமா என்றால் செய்யலாம். வா.சா. ஆ 7 உயர்நீதிமன்ற உத்தரவில் ரீசர்வே நம்பர் 273/17 ல் பொதுப்பாதைக்கான ஆக்கிரமிப்பை உடனடியாக அகற்றுவதற்காக பிறப்பிக்கப்பட்டது அதன் அடிப்படையில் அந்த மனுவானது அனுமதிக்கப்பட்டது என்றால் சரியல்ல. ரீசர்வே நம்பர் 273/17 ல் ஆக்கிரமிப்பு இருந்திருந்தால் பிரிதிவாதிகள் அதனை நீக்க கடமைபட்டவர்கள் என்றால் சரிதான். எனது முதல் விசாரணையில் O.S 378/2005 ல் 1ம் பிரதிவாதி அறிவிப்பு கொடுத்தததாகவும் அதில் 1ம் பிரதிவாதி அதில் 28.12.2011 ல் கோயில்அறங்காவலர்கள் கோயில் சொத்தில் மண் அரித்து செல்லாமல் இருக்கவேண்டி தடுப்பு சுவர் கட்டியதாக குறிப்பிட்டுள்ளதாக கூறியுள்ளேன்.என்றால் சரிதான். அதற்காக ஆவணங்கள் இந்த வழக்கில ்தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஞாபகமில்லை. அந்த கோயிலில் அறங்காவலர்கள் இந்து அறநிலையத்துறையிலிருந்து தான் நியமிப்பார்கள் என்று சொன்னால் சரியல்ல். பரம்பரை வாரிசுகளும் நியமிக்கப்படுவார்கள். நான் இந்து அறநிலையத்துறைக்கு எதிராக நாகர்கோவில் முதலாவது சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 89/2005 வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் நான் 11 வது வாதி என்றால் சரிதான். ரீசர்வே நம்பர் 273/2 ஐ பராமரித்து வருவது இந்து அறநிலையத்துறை என்றால் சரியல்ல. ரீசர்வே நம்பர் 273/2 ல் இருக்கும் சாமிதோப்பு கோயில் இந்து அறநிலையத்துறை கட்டு ப்பாட்டில் உள்ளது என்றால் சரியல்ல. இந்த கோயிலில் விழாக்கள் அனைத்தும் இந்து அறநிலையத்துறை மேற்பார்வையில் நடைபெறும் என்றால் சரியல்ல. அய்யா பிறந்தநாள் மட்டும் இந்து அறநிலையத்துறை மேற்பார்வையில் நடைபெறும். இந்த வழக்கில் இந்து அறநிலையத்துறையை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். வா.சா. ஆ 8, 9, 11 ஆவணங்களின் ரீசர்வே நம்பர் 273/17 ஆனது 13 நபருக்கு உரிமைப்பட்டது என்ற குறிபப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த

13 நபர்களை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான் வா.சா. ஆ 10 ல் ரீசர்வே நம்பர் 273/18 ஆனது 19 நபர்களுக்க உரிமைப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா. ஆ 10 ல் ரீசர்வே நம்பர் 273/18 ல் 18 வது நபராக காப்பாளர் அய்யா வைகுண்டசாமி அறக்கட்டளை வகைக்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ரீசர்வே நம்பர் 273/17 மற்றும் 273/18 இந்த வழக்கிலுள்ள வாதிகளுக்கு மட்டும் தான் உரிமைப்பட்டது என்று காட்டுவதற்க்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ரீசர்வே நம்பர் 273/17 மற்றும் 273/18 எனக்கோ மற்ற வாதிக்கோ எந்த உரிமையும் கிடையாது . தவறான கோரிக்கையை வைத்து இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்ாறல் சரியல்ல. ரீசர்வே நம்பர் 273/17 பாதையானது ரீசர்வே செட்டில்மெண்ட் க்கு முன்பே பொது மக்கள் பாதையாக அனுபவித்துவருகிறார்கள் என்றால் சரியல்ல. அதனால் தான் ரீசர்வே செட்டில்மெண்ட்க்கு வருவாய் துறை ஆவணங்களில் நிலவியல் பாதை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதை பற்றி தெரியாது. அந்த பாதையை தனி நபர்கள் யாரும் உரிமைகொண்டாடமுடியாது என்றால் சரியல்ல. 1,2, 4 பிரதிவாதிகள் நீதிமன்ற உத்தரவின் பெயரில்தான் ஆக்கிரமிப்பை வந்தார்கள் என்றால் சரியல்ல. உயர்நீதிமன்றமும், கீழமை நீதிமன்றமும் பாதை பொதுமக்களுக்கு உரிமைப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண். 378/2005, சி.ஆர்.பி நம்பர் 165/2009 வழக்கிலும் 1 முதல் 4 பிரதிவாதிகள் இந்த வழக்கில் 5 முதல் 7 பிரதிவாதிகளுக்கு சாதகமாக நடந்து கொண்டார்கள் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர் என்றால் சரியல்ல. ரீசர்வே எண். 273/17 ல் சட்ட விரோதமான கட்டுமானங்கள் இருந்தால் நானும் இந்த வழக்கில் மற்ற வாதிகளும் அகற்றிகொடுப்போம் என்று சொன்னால் சரிதான். 1971 முதல் 1975 க்குள் ரீசர்வே செட்டில்மெண்ட் முடிந்துவிட்டது என்றால் சரிதான். அதில் ஏதேனும் தவறுகள் இருந்தால் சம்பந்தப்பட்ட துறையில

அதிகாரிகளிடம் குறிப்பிட்ட காலத்தில் ஆட்சேபணை கொடுக்கவேண்டும் என்று சொன்னால் சரிதான். அவ்வாறு ஆட்சேபணை கொடுத்தாக இந்நீதிமன்றத்தல் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். ரீசர்வே எண். 273/18 ல் தடுப்பு சுவர் கட்டியதாக குறிப்பிட்ப்பட்டுள்ளது பொய் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள அனைத்தும் பொய் என்றும் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் அடி ப்படையில எந்தவித பரிகாரமும் கிடைக்கதக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. 1, 2,4 பிரதிவாதிகளுக்கு எதிரகா வழக்கு தாக்கல் செய்ய மூல காரணம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வருவாய்துறை ஆவணத்தில் நிலவியல் பாதையில் குறிப்ப்பிடப்பட்டுள்ளதை மாற்றம் செய்ய தேவையில்லை அதை மாற்றம் செய்தால் மற்ற உரிமையாளர்கள் பாதிக்கப்படுவார்கள் என்றால் சரியல்ல. தேவையான தரப்பினர்களை இவ்வழக்கில் சேர்க்காததால் இவ்வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. 1,2,4 பிரதிவாதிகளின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

குறுக்குவிசாரணை முடிக்கப்படுகிறது.